www.Padasalai.Net www.TrbTnpsc.com



# PG – தமிழ் - 2015 –
# முதுகலை ஆசிரியர் -
# போட்டித்தேர்வுக்கான –உத்தேசமான
# வினா - விடைகள் மற்றும் விளக்கங்கள்

Booklet series : C

1. ஆட்சியையும் போரையும் பண்புகளையும் அரசனுக்கு வேண்டுமளவு தொகுத்துக் கூறும் வரலாற்று இலக்கியம்
அ) பதிற்றுப்பத்து ஆ) கலித்தொகை இ) அகநானூறு ஈ) புறநானூறு
***விடை: அ) பதிற்றுப்பத்து***

2. மோரியர், நந்தர், வடுகர் முதலிய வடநாட்டு மன்னர்களைப் பற்றிக் குறிப்பிடும் நூல்
அ) புறநாநூறு ஆ) அகநானூறு இ) பதிற்றுப்பத்து ஈ) நற்றிணை
***விடை : இ) அகநானூறு***

3. 'தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை' - இவ்வடிகள் இடம்பெறும் நூல்
அ) மதுரைக் காஞ்சி ஆ) பரிபாடல் இ) சிறுபாணாற்றுப்படை ஈ) திருமுருகாறறுப்படை
***விடை: இ) சிறுபாணாற்றுப்படை***

4. "நின்ற சொல்லர் நீடு தோன்றி னியர்" எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?
அ) பரணர் ஆ) நக்கீரர் இ) கபிலர் ஈ) வெள்ளிவீதியார்
***விடை: இ) கபிலர் - நற்றிணை***

5. 'தசும்பு துளங்கிருக்கை' – பொருள் தருக.
அ) படைக்கலக் கொட்டில் ஆ) கட்குடம் வைக்கப்படும் இருக்கை
இ) அரசன் அமரும் இருக்கை ஈ) அணிகலன் வைக்கப்படும்இருக்கை
***விடை: ஆ) கட்குடம் வைக்கப்படும் இருக்கை (பதிற்றுப்பத்து)***

6. முச்சங்கத்திற்கும் உரிய இலக்கண நூல்
அ) அகத்தியம் ஆ) தொல்காப்பியம் இ) நன்னூல் ஈ) யாப்பருங்கலக் காரிகை
***விடை:அ) அகத்தியம்***

7. "மாலையும் மலைப் பாங்கும் ஆகிய சூழலில்
களாவாமுக்கத்தைப் புனையவல்ல பேராளர்"
அ) பரணர் ஆ) கபிலர் இ) நக்கீரர் ஈ) மோசிகீரனார்
***விடை: ஆ) கபிலர்***

8. "பீடுகெழு குரிசிலும் ஓர் ஆடுகள மகனே" என்ற பாடலைப் பாடியவர்
அ) ஔவையார் ஆ) ஆதிமந்தியார் இ)வெள்ளி வீதியார் ஈ) காக்கைப் பாடினியார்
***விடை: ஆ) ஆதிமந்தியார்***

*"மள்ளர் குழீஇய விழவி னானும்*
*மகளிர் தழீஇய துணங்கை யானும்*
*யாண்டும் காணேன் மாண்தக் கோனைக்*
*கோடீர் இலங்குவளை நெகிழ்ந்த*
*பீடுகெழு குரிசிலுமோர் ஆடுகள மகனே." (குறு.31)*





www.puthiyavidiyaltheni.in

"மாட்சிமையுள்ள தகுதியுடையோனை வீரர் கூடியுள்ள சேரி விழவின்கண்ணும் மகளிர் தம்முள் தழுவி ஆடுகின்ற துணங்கைக் கூத்தின்கண்ணும் ஆகிய எவ்விடத்தும் கண்டேனில்லை; யானும் ஆடுகின்ற களத்திற்குரிய ஒரு மகளே; என் கையில் உள்ள சங்கை அறுத்துச் செய்த வளையல்களை நெகிழச் செய்த பெருமை பொருந்திய என் தலைவனும் ஆடுகின்ற களத்திலுள்ள ஒருவனே," என்று கூறுகிறாள் ஆதிமந்தி.

9. மூன்று தமிழ்ச்சங்கம் இருந்தமை உண்மை என்பார்
அ) கா.சுப்பிரமணிய பிள்ளை ஆ) வி.ஆர். இராமச்சந்திர தீட்சிகர்
இ) கே.ஏ.நீலகண்ட சாஸ்த்திரியார் ஈ) எஸ்.வையாபுரிப்பிள்ளை
***விடை: அ) கா.சுப்பிரமணிய பிள்ளை***

10. திருச்சீரலைவாய் என்பதைக் குறிக்கும் முருகனின் படைவீடு
அ) திருப்பரங்குன்றம் ஆ) பழனி இ) திருச்செந்தூர் ஈ) சுவாமிமலை
***விடை: இ) திருச்செந்தூர்***

1. திருப்பரங்குன்றம்,
2. திருச்செந்தூர் அல்லது திருச்சீரலைவாய்,
3. திருவாவினன்குடி (எ) பழனி ,
4. திருவேரகம் (எ) சுவாமிமலை,
5. திருத்தணி அல்லது குன்றுதோறாடல்
6. பழமுதிர்சோலை

11. பாசண்டச் சாத்தன் யாருக்காக மாயக்குழவியாய் உருவெடுத்தான்?
அ) தேவந்தி ஆ) மாலதி இ) மாதரி ஈ) ஐயை
***விடை: ஆ) மாலதி***
9. கனாத்திறம் உரைத்த காதை – பாசாண்ட சாத்தான் என்னும் தெய்வம் குழந்தை வடிவாக வந்து வளர்ந்து தேவந்தியை மணம் கொள்ளுதல்

12. "அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்"-யார், யாருக்குக் கூறியது.
அ) கண்ணகி கவுந்தியடிகளுக்கு ஆ) கோவலன் கவுந்தியடிகளுக்கு
இ) மாதவி கோவலனுக்கு ஈ) கண்ணகி கோவலனுக்கு
***விடை :இ) மாதவி கோவலனுக்கு***
13.புறஞ்சேரி இறுத்த காதை – மாதவியின் கடிதத்தைக் கண்டறிந்த கோவலன் அதையே தான் அளித்ததாகத் தன்பெற்றோரிடம் கொடுக்குமாறு கவுசிகனிடம் உரைத்தல்

13. ஆடவரை வெறுக்கும் __________ சீவகன் மணந்தான்.
அ) சுரமஞ்சரியை ஆ) கேமசரியை இ) விமலையை ஈ) கோவிந்தையை
***விடை: அ) சுரமஞ்சரியை***
சுரமஞ்சரியார் இலம்பகம் - சீவகசிந்தாமணி

14. "நாளும் நாள் சாகின்றோமால்
நமக்குநாம் அழாதது என்னோ"? இவ்வடிகள் அமைந்துள்ள நூல்
அ) வளையாபதி ஆ) மணிமேகலை இ) குண்டலகேசி ஈ) சீவகசிந்தாமணி
***விடை: இ) குண்டலகேசி***

15. 'திவிட்டன் - விசயன்' என்பவரின் கதையை விளக்கும் நூல்?
அ) உதயணகுமார காவியம் ஆ) சூளாமணி இ) நீலகேசி ஈ) குண்டலகேசி
***விடை: ஆ) சூளாமணி***

சுரமை என்னும் நாட்டை (போதன மாநகரம்) ஆளும் அரசன் பயாபதிக்கு மனைவியர் இருவர். மகாபதி, சசி. இவ்விருவரும் விசயன், திவிட்டன் என்னும் இரு புதல்வர்களைப் பெற்றெடுக்கின்றனர். அசுவ கண்டன் என்னும் விஞ்சையர் கோன், திவிட்டன் தனக்குப் பணியாமையால் சினங்கொண்டு மாயச்சிங்கத்தை அவன் மீது ஏவுகின்றான். மாயச் சிங்கம் திவிட்டனைக் கண்டு ஓடிவிட குகையிலிருந்து வெளிப்பட்ட உண்மையான

www.puthiyavidiyal.in

www.Padasalai.Net www.TrbTnpsc.com



சிங்கத்தைக் கொன்று வென்ற திவிட்டன் விஞ்சையர் வஞ்சியான சயம்பலையை மணக்கின்றான். திவிட்டன் படையும், அசுவ கண்டனின் படையும் போரிடுகின்றன. அசுவகண்டன் இறக்கின்றான். திவிட்டன் கோடிக் குன்றெடுத்து நின்று வாசுதேவன் எனக் காட்டுகின்றான். திவிட்டனுக்குச் சோதிமாலை என்னும் பெண் மகவு பிறக்கின்றது. சோதிமாலை சுயம்வரத்தில் தன் மாமன் மகன் அமுததேசனை மணக்கிறாள். பயாபதி அரசன் துறவு மேற்கொண்டு உலகுக்கு ஒரு சூளாமணியாகி வீட்டைகின்றான். வடமொழி இலக்கியத்தில் வரும் விதூடகனையும் இக்காப்பியத்துள் அழைத்துள்ளார்.

16. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர்

அ) பூதஞ்சேந்தனார் ஆ) பெருவாயில் முள்ளியார் இ) காரியாசான் ஈ) நல்லாதனார்

***விடை: இ) காரியாசான்***

| வ. எண். | நூல்கள் | பொருள் | பாக்கள் | ஆசிரியர்கள் | நூலின் காலம் கி.பி | சமயம் | கடவுள் வாழ்த்து |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | நாலடியார் | அறம் | 400 | சமண முனிவர்கள் | 7 | சமணம் | அருகன் |
| 2. | நான்மணிக்கடிகை | அறம் | 104 | விளம்பி நாகனார் | 4 | வைணவம் | மாயவன் |
| 3. | இன்னா நாற்பது | அறம் | 40 | கபிலர் | 4 | சைவம் | சிவன் பலராமன் மாயோன்முருகன் |
| 4. | இனியவை நாற்பது | அறம் | 40 | பூதஞ்சேந்தனார் | 5 | சைவம் | மும்மூர்த்திகள் |
| 5. | திரிகடுகம் | அறம் | 100 | நல்லாதனார் | 5 | வைணவம் | மாயவன் |
| 6. | ஆசாரக்கோவை | அறம் | 100 | கயத்தூர் பெருவாயின்முள்ளியார் | 5 | சைவம் | சிவன் |
| 7. | பழமொழி | அறம் | 400 | முன்றுறை அரையனார் | 5 | சமணம் | அருகன் |
| 8. | சிறுபஞ்சமூலம் | அறம் | 100 | காரியாசான் | 5 | சமணம் | |
| 9. | ஏலாதி | அறம் | 80 | கணிமேதாவியார் | 5 | சமணம் | |
| 10. | முதுமொழிக்காஞ்சி | அறம் | 100 | கூடலூர் கிழார் | 5 | | |
| 11. | முப்பால் (திருக்குறள்) | அறம் | 1330 | திருவள்ளுவர் | 2 | ----------- | --------------- |
| 12. | ஐந்திணை ஐம்பது | அகம் | 50 | மாறன் பொறையனார் | 4 | | |
| 13. | திணைமொழி ஐம்பது | அகம் | 50 | கண்ணஞ்சேந்தனார் | 5 | வைதிகம் | |
| 14. | ஐந்திணை எழுபது | அகம் | 70 | மூவாதியார் | 5 | | விநாயகர் |
| 15. | திணைமாலை நூற்றைம்பது | அகம் | 150 | கணிமேதாவியார் | 5 | சமணம் | |
| 16. | கைந்நிலை(ஐந்திணை அறுபது) | அகம் | 60 | புல்லங்கடனார் | 5 | | |
| 17. | கார் நாற்பது | அகம் | 40 | மதுரைக்கண்ணன் கூத்தனார் | 5 | வைணவம் | |
| 18. | களவழி நாற்பது | புறம் | 40 | பொய்கையார் | | வைணவம் | |
| | இன்னிலை | அறம் | 45 | பொய்கையார் | 5 | வைணவம் | |

17. "சமயக்கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறி

www.puthiyavidiyaltheni.in

பொருளிது வென்ற வள்ளுவன்" – எனப் புகழ்ந்தவர்

அ) நத்தத்தனார் ஆ) கல்லாடர் இ) செங்கண்ணனார் ஈ) வண்ணக்கஞ்சாத்தனார்.

***விடை: ஆ) கல்லாடர்***

- வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - பாரதியார்.
- சமயக்கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது வென்ற பொருள் - கல்லாடர்
- "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்". - ஔவையார்.
- "கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி" - இடைக்காடார்
  "எல்லாப் பொருளும் இதன்பால் உள" - மதுரைத் தமிழ் நாகனார்.
- "வள்ளுவர் செய் திருக்குறளை மறுஅற நன்குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி" -மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை.
- "எம்மதமும் எவ்வினமும் எந்நாளும் சம்மதம் என்று ஏற்கும் தமிழ் வேதம்" - சுத்தானந்த பாரதியார்.
- "எப்பாவலரும் இயைபவே வள்ளுவனார் முப்பால் மொழிந்த மொழி" - கல்லாடனார்
- "ஓதற்கு எளிதாய், உணர்வதற்கு அரியதாகி, வேதப் பொருளாய் மிகவிளக்கி" - மாங்குடி மருதனார்
- "வேதப் பொருளை விரகால் விரித்தும்" - செங்கண்ணனார்
- "ஆரியம் வேதம் உடைத்து" - வண்ணகஞ் சாத்தனார்
- "இந்நூலை முற்றிலும் ஓதியபின் வேறுநூல் பயிற்சி வேண்டா மன்னு தமிழ்ப் புலவராய் வீற்றிருக்கலாம்" - நத்தத்தனார்.

18. இவ்வுலசகிற்கெல்லாம் ஒப்பற்ற மாமணியோன்று மிக்க ஒளியைத் தரும் தெய்வமகள் என்று கண்ணகியைப் போற்றியவள்

அ) வசந்தமாலை ஆ) சுதமதி இ) தேவந்தி ஈ) சாலினி

***விடை: ஈ) சாலினி***

சிலப்பதிரகாரம் - காதை 12 - வேட்டுவ வரி – பாடல்- 3. சாலினி என்பவள் ஆவேசித்துக்கூறுதல்

19. சூளாமணி வடமொழியிலுள்ள எந்த நூலைத் தழுவி எழுதப்பட்டது

அ) சாகுந்தலம் ஆ) சூதசங்கிதை இ) மகாவம்சம் ஈ)ஸ்ரீபுராணம்

***விடை: ஈ)ஸ்ரீபுராணம்***

- ❖ சிந்தாமணிக்கு அடுத்த நிலையில் போற்றப்படும் நூல்
- ❖ ஸ்ரீபுராணம் எனப்படும் சமண மா புராணத்தின் கதை தழுவல்
  - ❖ கதை கூறும் போக்கில் பாகவதமும் சூளாமணியும் ஒத்துள்ளன.

20. "எல்லாம் வைகுண்டார் முன் தோன்றா கெடும்" எனும் அடி இடம்பெறும் நூல்

அ) நான்மணிக் கடிகை ஆ) இனியவை நாற்பது இ) நீதிநெறி விளக்கம் ஈ) இன்னா நாற்பது

***விடை: அ) நான்மணிக் கடிகை***

பாடல் - 8

கோபம் கொண்டவர்ட முன் எல்லா நன்மைளும் தோன்றாது போகும்

வெகுண்டார் என்று வந்திருக்க வேண்டும்

21. வட்டத் தொட்டி என்ற இலக்கியச் சங்கம் அமைத்தவர்

அ) கா.சு.பிள்ளை ஆ)(மு.இராகவையங்கார் இ) மறைமலையடிகள் ஈ) ரசிகமணி டி.கே.சிதம்பரநாதன்

***விடை: ஈ) ரசிகமணி டி.கே.சிதம்பரநாதன்***

22. 'தமிழ்-இலத்தீன் ஒப்பிலக்கண ஆய்வு' என்ற நூலைப் பதிப்பித்தவர்

அ) ஜி.யு.போப் ஆ) இராபர்டி.நொபிலி இ) சீகன் பால்கு ஈ) ரா.பி.சேதுப்பிள்ளை

***விடை: இ) சீகன் பால்கு***

23. "அறமும் அரசியலும்" என்ற நூலின் ஆசிரியர்

அ) இராகவையங்கார் ஆ) வ.சுப.மாணிக்கம் இ) மு.வரதராசனார் ஈ) ரா.பி.சேதுப்பிள்ளை

***விடை: இ) மு.வரதராசனார்***

24. பொருத்துக:



www.puthiyavidiyaltheni.in

அ) மௌனி 1. மங்கையற்கரசியின் காதல்
ஆ) ஜெயகாந்தன் 2. தகுந்த தண்டனையா?
இ) வ.வே.சு.ஐயர் 3. யாருக்காக அழுதான்?
ஈ) லட்சுமி 4. அழியாச் சுடர்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 1 | 3 | 2 | 4 |
| ஆ) | 2 | 1 | 3 | 4 |
| இ) | 4 | 3 | 1 | 2 |
| ஈ) | 4 | 2 | 1 | 3 |

***விடை: இ) 4 3 1 2***

25. பாதையில் பதிந்த அடிகள் என்னும் புதினத்தை எழுதியவர்
அ) அநுத்தமா ஆ) சிவசங்கரி இ) இராஜம் கிருஷ்ணன் ஈ) திலகவதி
***விடை: இ) இராஜம் கிருஷ்ணன்***

- *பொதுவுடைமை இயக்கபோராளி மணலூர் மணியம்மை குறித்து எழுதிய நூல்*

26. "நால்வகைப் பொருளும் ஒன்பான் சுவைகளும் கூடிப்பொருந்தி இருப்பதே ஒரு நல்ல நாடகம்" என்று கூறும் நூல்
அ) இந்திரகாளியம் ஆ) செயிற்றியம் இ) சயந்தம் ஈ) பஞ்ச பாரதீயம்
விடை:

27. 'ஆனந்தன்'என்னும் பாத்திரம் இடம்பெற்றுள்ளநாடகம்

A) சந்திரோதயம் B) ஓர் இரவு C) வேலைக்காரி D) நல்லதம்பி

விடை:

28. 'பச்சையப்பர்'என்பது

A) சமூகநாடகம் B)வரலாற்றுநாடகம் C) அரசியல் நாடகம் D) வாழ்க்கைவரலாற்றுநாடகம்

***விடை: D) வாழ்க்கைவரலாற்றுநாடகம் (மு.வ)***

29. தமிழ்த் திறனாய்வுத் துறையில் முன்னோடியானமறைமலையடிகளின் முதல் நூல்

A) முல்லைப்பாட்டுஆராய்ச்சி B) பட்டினப்பாலைஆராய்ச்சி C) முதற்குறள் வாதநிராகரணம் D) தமிழரும் ஆரியரும்

***விடை :C) முதற்குறள் வாதநிராகரணம்***

- பொருந்தும் உணவும் பொருந்தா உணவும் (1921)
- மக்கள் நூறாண்டு உயிர்வாழ்க்கை, இரு தொகுதிகள் (1933)
- மனித வசியம் அல்லது மனக்கவர்ச்சி (1927)
- யோக நித்திரை: அறிதுயில் (1922)
- தொலைவில் உணர்தல் (1935)
- மரணத்தின்பின் மனிதர் நிலை (1911)
- சாகுந்தல நாடகம் (சமசுகிருதத்தில் இருந்து மொழி பெயர்த்தது) (1907)
- சாகுந்தல நாடக ஆராய்ச்சி (1934)
- ஞானசாகரம் மாதிகை (1902)
- Oriental Mystic Myna Bimonthly (1908-1909)
- Ocean of wisdom, Bimonthly(1935)
- Ancient and Modern Tamil Poets (1937)
- முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர் (1936)
- முல்லைப்பாட்டு- ஆராய்ச்சியுரை (1903)
- பட்டினப்பாலை-ஆராய்ச்சியுரை (1906)
- சாதி வேற்றுமையும் போலிச் சைவரும் (1911)
- முதற்குறள் வாத நிராகரணம் (1898)
- திருக்குறள் ஆராய்ச்சி (1951)
- முனிமொழிப்பரகாசிகை (1899)
- மறைமலையடிகள் பாமணிக் கோவை (பாடல்கள்) (1977)
- அம்பிகாபதி அமராவதி (நாடகம்) (1954)
- கோகிலாம்பாள் கடிதங்கள் (புதினம்) (1921)
- குமுதவல்லி: அல்லது நாகநாட்டரசி (புதினம்) (1911)
- மறைமலை அடிகள் கடிதங்கள் (1957)
- அறிவுரைக் கொத்து (1921)
- அறிவுரைக் கோவை (1971)
- உரைமணிக் கோவை (1972)


www.puthiyavidiyaltheni.in

- கருத்தோவியம் (1976)
- சிந்தனைக் கட்டுரைகள் (1908)
- சிறுவற்கான செந்தமிழ் (1934)
- இளைஞர்க்கான இன்றமிழ் (1957)
- திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை (1900)
- மாணிக்க வாசகர் மாட்சி (1935)
- மாணிக்க வாசகர் வரலாறும் காலமும் (இரு தொகுதி) (1930)
- மாணிக்க வாசகர் வரலாறு (1952)
- சோமசுந்தரக் காஞ்சியாக்கம் (1901)
- சோமசுந்தர நாயகர் வரலாறு (1957)
- கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா (1968)
- திருவாசக விரிவுரை (1940)
- சித்தாந்த ஞான போதம், சதமணிக்கோவை குறிப்புரை (1898)
- துகளறு போதம், உரை (1898)
- வேதாந்த மத விசாரம் (1899)
- வேத சிவாகமப் பிராமண்யம் (1900)
- Saiva Siddhanta as a Philosophy of Practical Knowledge (1940)
- சைவ சித்தாந்த ஞானபோதம் (1906)
- சிவஞான போத ஆராய்ச்சி (1958)
- Can Hindi be a lingua Franca of India? (1969)
- இந்தி பொது மொழியா ? (1937)
- Tamilian and Aryan form of Marriage (1936)
- தமிழ் நாட்டவரும், மேல்நாட்டவரும் (1936)
- பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம் (1958)
- வேளாளர் நாகரிகம் (1923)
- தமிழர் மதம் (1941)
- பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும் (1906)

ஆகிய 54 நூல்களை எழுதியுள்ளார்.

30. ராபர்ட்டிநொபிலி,குமரகுருபரர்போன்றோரைப் பற்றியகாட்சிகளைக் கொண்டுள்ளநாடகம்

A) திருமலைநாயக்கர் B) முடிந்தகோயில் C) பாணபுரத்துவீரன் D) மறைந்தமாநகர்

***விடை: திருமலைநாயக்கர்***

31. விஜயரங்கசொக்கநாதரிடம் அமைச்சராக இருந்தவர்

A) இராமலிங்கர் B) தாயுமானவர் C) சிவப்பிரகாசர் D) அருணகிரியார்

***விடை:B) தாயுமானவர்***

32. 'பிரபுலிங்கலீலை'யைப் பாடியவர்

A) இராமலிங்கர் B) சிவப்பிரகாசர் C) தாயுமானவர் D) எல்லப்பநாவலர்

***விடை: B) சிவப்பிரகாசர்***

33. 'சின்னசீறாவைப்'பாடியவர்

A) ஆப்துல் காதிர் B) உமறுப்புலவர் C) பனிஅகமதுமரக்காயர் D) நயினார்லப்பை

***விடை:C) பனிஅகமதுமரக்காயர்***

34. உ.வே.சாவைப் புரந்தமடம்

A) தருமபுரஆதீனம் B) திருப்பனந்தாள் மடம் C) மதுரைஆதீனம் D) திருவாவடுதுறைஆதீனம்

***விடை: தருமபுரஆதீனம்***

35. 'என்னைநன்றாக இறைவன் படைத்தனன் தன்னைநன்றாகத் தமிழ்செய்யுமாறே'என்றுபாடியவர்

A) திருஞானசம்பந்தர் B) குமரகுருபரர்C) அருணகிரிநாதர் D) திருமூலர்

***விடை:D) திருமூலர்***

36. 'இன்னல் செய் இராவணன் இழைத்ததீமைபோல்'தோன்றியவள்

A) கைகேயி B) மந்தரை C) சூர்ப்பனகை D) தாடகை

***விடை:B) மந்தரை***

37. "உரங்கொள் தேமலர்ச் சென்னிஉரிமைசால் வரங்கொள் பொன்முடிதம்பிவனைந்திலன்" தம்பியின் பெயர்

www.puthiyavidiyaltheni

www.Padasalai.Net www.TrbTnpsc.com



A) சுக்கிரீவன் B) இலக்குவன் C) பரதன் D) வீடணன்

***விடை: C) பரதன்***

38. கண்ணப்பநாயனாரின் நாடு

A) திருமுனைப்பாடி B) சோழநாடு C) கொங்குநாடு D) பொத்தம்பிநாடு

***விடை: D) பொத்தம்பிநாடு***

39. நம்பியாரூரரைவளர்த்தஅரசர்

A) நாகன் B)சடையனார் C) அமர்நீதி D) நரசிங்கமுனையர்

***விடை: D) நரசிங்கமுனையர்***

40. கலிங்கத்துப்பரணிகாட்டும் சோழரின் படைத் தலைவன்

A) பழுவேட்டரையர் B) திண்ணன் C) கருணாகரத் தொண்டைமான் D) பரஞ்சோதியார்

***விடை: C) கருணாகரத் தொண்டைமான்***

41. 'பிரமபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே"-பிரமபுரத்தின் இன்றைய பெயர்
அ) திருவாரூர் ஆ) சிதம்பரம் இ) சீர்காழி ஈ) திருச்சி

**விடை: இ) சீர்காழி**

42. 'திருக்கோத்தும்பி' என்னும் பதிகம் அமைந்துள்ள இலக்கியம்
அ) முதல் திருமுறை ஆ) திருவாசகம் இ) திருவருட்பா ஈ) திருமந்திரம்

***விடை: ஆ) திருவாசகம்***

43. "மாணிக் குறளனே தாலேலோ வையம் அளந்தானே தாலேலோ" எனப் பாடியவர்
அ) பெரியாழ்வார் ஆ) ஆண்டாள் இ) குலசேகராழ்வார் ஈ) திருமங்கையாழ்வார்

***விடை: அ) பெரியாழ்வார்***

44. திராவிட வேதம் என்று போற்றப்படுவது
அ) பெரிய திருமடல் ஆ) அமலனாதிபிரான் இ) பெரியதிருமொழி ஈ) திருவாய்மொழி
***விடை: ஈ) திருவாய்மொழி***

45. "வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மீளாத காதல்நோ யாளன்" எனப் பாடியவர்
அ) குலசேகராழ்வார் ஆ) நம்மாழ்வார் இ) மதுரகவியாழ்வார் ஈ) திருப்பாணாழ்வார்
***விடை: அ) குலசேகராழ்வார்***

46. 'சமூகம் என்பது நாலுபேர்'- சிறு கதையின் ஆசிரியர்
அ) ஜெயகாந்தன் ஆ) கி.வா.ஜ இ) சி.சு.செல்லப்பா ஈ) சுந்தரராமசாமி

47. சாகித்த அகாதெமி பரிசு பெற்ற இலக்கிய ஆராய்ச்சி நூல் எது?
அ) வீரர் உலகம் ஆ) தனிதமிழ்ச்சுவை இ) காவிய காலம் ஈ) அகல் விளக்கு

***விடை: அ) வீரர் உலகம் - கே.வி ஜகந்நாதன் - கட்டுரை -1967***

- ***அகல் விளக்கு – நாவல் - 1961- மு.வ***
- ***தனிதமிழ்ச்சுவை மற்றும் காவிய காலம் ஆகியன சாகித்திய அகாதெமி பரிசு பெற்றது அல்ல***

48. தொல்காப்பியம் குறிப்பிடும் உடைநடை வகைகள்

www.puthiyavidiyaltheni.in

www.Padasalai.Net www.TrbTnpsc.com



அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

***விடை: இ) 4***

49. பாரதியாரின் சிறுகதைகளில் ஒன்று
அ) ஒரு நாள் கழிந்தது ஆ) காணி நிலம் இ) மிளகாய்ப்பழச்சாமியார் ஈ) காக்கைச் சிறகினிலே
***விடை: இ) மிளகாய்ப்பழச்சாமியார்***
ஒரு நாள் கழிந்தது – புதுமைப்பித்தன்

50. தமிழ்ச்சுடர் மணிகள் என்னும் நூலை எழுதியவர்
அ) வையாபுரிப்பிள்ளை ஆ) சிதம்பர ரகுநாதன் இ) டி.கே சிதம்பரநாதன் ஈ) பரிதிமாற் கலைஞர்
***விடை: அ) வையாபுரிப்பிள்ளை***

51. செயிற்றியம்
அ) எழுத்திலக்கண நூல் ஆ) சொல்லிலக்கண நூல் இ) யாப்பிலக்கண நூல் ஈ) நாடக இலக்கண நூல்
***விடை: ஈ) நாடக இலக்கண நூல்***

52. 'நாட்டபி மானமுள் மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க் கென்றுமே உவப்பு!'- இக்கூற்றை நிகழ்த்திய கதைப்பாத்திரம்
அ)குடிலன் ஆ)சீவகவழுதி இ)நடராசன் ஈ)நாராயணன்
**விடை: ஆ)சீவகவழுதி**
11 – STD- செய்யுள் - மனோன்மணி

53. 'நாடகவியல்' என்னும் நாடக இலக்கண நூலை இயற்றியவர்
அ) பம்மல் சம்பந்த முதலியார் ஆ) பெ.சுந்தரம் பிள்ளை இ) பரிதிமாற்கலைஞர் ஈ) சங்கரதாஸ் சுவாமிகள்
***விடை: இ) பரிதிமாற்கலைஞர்***

54. விதூடகம் என்பது
அ) நகைச்சுவை ஆ) வசை இ) துன்பியல் ஈ) வெற்றி
***விடை: அ) நகைச்சுவை***

55. கற்பனைத் திறன் என்பத புதிர்நிலை வாய்ந்ததாகவும் விளக்க இயலாததாகவும் உள்ளது. அதனுடைய விளைவுகளைக் கொண்டே அத்திறனை உணர முடிகிறது என்று கூறியவர்.
அ) வின்செஸ்டர் ஆ) இரஸ்கின் இ) கோல்ரிட்ஜ் ஈ) வில்லியம் தெய்லர்
***விடை: ஆ) இரஸ்கின்***

56. மொழிகளில் காணப்படும் சொற்களின் உள்ளமைப்பை ஆராய்வதை மொழியியலாளர் என்னவென்று குறிப்பர்?
அ) உருபனியல் ஆ) எழுத்தியல் இ) உறுப்பியல் ஈ) பொருளியல்
***விடை: அ) உருபனியல்***

57. ஐரோப்பாவில் பின்லாண்டு முதல் கிழக்கே ரஷ்யா வரையில் வழங்கும் மொழிகள்
அ) அன்னாமியினம் ஆ) ஆரிய இனம் இ) செமிட்டிக் இனம் ஈ) சித்திய இனம்
***விடை: ஈ) சித்திய இனம்***

58. திராவிட மொழிகள் வடமொழிகளிலிருந்து மாறுபட்டவை என்பதற்கு கால்டுவெல் எத்தனை இலக்கண அமைதிகளைக் கூறினார்?
அ) 10 ஆ) 14 இ) 13 ஈ) 15

59. "திருந்திய பண்புத் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி புகல் செம்மொழி யாம்" என்று கூறியவர்
அ) பரிதிமாற் கலைஞர் ஆ) மறைமலைஅடிகள் இ) திரு.வி.கல்யாண சுந்தரம் ஈ) எஸ்.வையாபுரிப் பிள்ளை
***விடை: அ) பரிதிமாற் கலைஞர்***

60. தொல்காப்பியர் சுட்டும் மருங்கொலி
அ) ச,ஞ ஆ) ப,ம இ) ர,ழ ஈ) ல,ள
***விடை : ஈ) ல,ள***



www.puthiyavidiyaltheni.in

61. 'வண்ணச்சினைச் சொல்' அமைய வேண்டிய முறை
அ) அடை, சினை, முதல் ஆ) சினை, முதல், அடை
இ) முதல், சினை, அடை ஈ) அடை, முதல், சினை
***விடை: அ) அடை, சினை, முதல்***

62. 'களிப்பு' என்பது இக்காலத்தில் அடைந்த பொருள்
அ) இழிபொருட்பேறு ஆ) உயர்பொருட்பேறு இ) சிறப்புப் பொருட்பேறு ஈ) பொதுப் பொருட்பேறு
***விடை: ஆ) உயர்பொருட்பேறு***

63. இக்காலப் பேச்சு வழக்கினில் ஏற்கப் பெற்ற தொடர்
அ) நான் அவன் அல்லன் ஆ) நான் அவன் அல்லேன் இ) நான் அவன் இல்லை ஈ) நான் அவன் அல்ல
***விடை: ஈ) நான் அவன் அல்ல***

64. தமிழுக்கே உரிய ஐந்து எழுத்துக்கள்
அ) ஆ, ஈ, ஊ, ஏ, ஓ ஆ) ற, ன, ழ, எ, ஒ இ) க, ச, ட, த, ப ஈ) ய, ர, ல, வ, ள
***விடை: ஆ) ற, ன, ழ, எ, ஒ***

65. மறைத்துப் பேச வேண்டியவற்றைத் தொல்காப்பியம் பின்வருமாறு குறிப்பிடும்
அ) இடக்கரடக்கல் ஆ) ஆகுபெயர் இ) மங்கல வழக்கு ஈ) அவையல் கிளவி
***விடை: ஈ) அவையல் கிளவி***

66. 'யகரம் பிற உயிர்களுடன் இணைந்து மொழி முதல் வருவது வடமொழித் தொடர்பால் ஏற்பட்டிருக்கலாம்' எனக் கூறியவர்
அ) தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் ஆ) எஸ்.வையாபுரிப்பிள்ளை
இ) க.வெள்ளைவாரணர் ஈ) ச.அகத்திய லிங்கம்

விடை:

67. அப்பர் தேவாரத்தில் 'யான்' என்ற சொல் எத்தனை முறை வருகின்றது?
அ) 25 ஆ) 29 இ) 26 ஈ) 30
***விடை: ஆ) 29***

68. 'ஓம்' என்ற விகுதி யாருடைய காலத்தில் தமிழில் பெருகியது?
அ) பல்லவர் ஆ) பாண்டியர் இ) சேரர் ஈ) சோழர்
***விடை: ஈ) சோழர்***

69. சங்க காலத் தமிழில் 'செய்யு' என்ற வடிவம் எக்காலத்தை காட்டியது

அ) நிகழ்காலம் ஆ) இறந்த காலம் இ) எதிர்காலம் ஈ) மூன்று காலமும்

***விடை: ஆ) இறந்த காலம்***

70. ற்.ற். > ச்ச் மாற்றம் குறித்துக் கூறும் இலக்கண நூல்

அ. முத்து வீரியம் ஆ. வீரசோழியம் இ. நேமி நாதம் ஈ. நன்னூல்

***விடை: ஆ. வீரசோழியம்***

71. 'போகிறேன்' என்னும் சொல்லில் அமைந்தள்ள இடைநிலை

அ. ஆ நின்று ஆ. கிறு இ. கின்று ஈ. ப்

***விடை: ஆ. கிறு***

72. துள்ளல் ஓசையுடன் வரும்பா

அ. வெண்பா ஆ. வஞ்சிப்பா இ. கலிப்பா ஈ. ஆசிரிப்பா

www.puthiyavidiyaltheni.in

www.Padasalai.Net www.TrbTnpsc.com



***விடை: இ. கலிப்பா***

73. வஞ்சிப்பாவில் குறைந்த அளவில் வரும் அடிகள்

அ. இரண்டு ஆ. மூன்று இ. நான்கு ஈ. ஐந்து

**விடை: ஆ. மூன்று**

74. பல அணிகள் கலந்து வரும் அடிகள்

அ. சங்கீரணம் ஆ. வாழ்த்து இ. உவமை ஈ. வேற்றுமை

***விடை: அ. சங்கீரணம்***

75. காப்பியத்தின் பண்பைக் கூறும் அணி

அ. உருவகம் ஆ. தன்மை இ. பாவிகம் ஈ. விசேடம்

***விடை: இ. பாவிகம்***

76. இளிவரல் மெய்ப்பாட்டின் 'வருத்தம்' என்ற பொருள் உணர்த்தும் உட்கருத்து

அ. அச்சம் ஆ. செயல் இ. முயற்சி ஈ. துன்பம்

***விடை: ஈ. துன்பம்***

77. "கடையிற் சிறந்த கருநெருங்கட் பேதைக்கு
இடையிற் சிறிய தொன்றில்" இவ்வரிகளில் பெறப்படும் மெய்ப்பாடு

அ. இளிவரல் ஆ. மருட்கை இ. பெருமிதம் ஈ. உவமை

விடை:

78. எதைச் சொல்லுங்கால் 'தலைவிக்காயின் அவளறியும் கருப்பொருளானே செய்யல் வேண்டும்'?

அ. உள்ளுறை ஆ. இறைச்சி இ. திணை ஈ. உவமை

விடை:

79. "இலங்குமருவித் திலங்கு மருவித்தே
வானினிலங்கு மருவித்தே தானுற்ற
சூன்போணான் பொய்த்தான் மலை" இவ்வரிகளில் உணர்ந்து பெறப்படும் பொருள்

அ. இறைச்சிப் பொருள் ஆ. உள்ளுறைப் பொருள் இ. உவமப் பொருள் ஈ. உரிப் பொருள்

விடை:

80. "பிடிபிணை மஞ்ஞைநடை நோக்குச்சாயல்" இதில் இடம்பெறும் பொருள்கோள்வகை

அ. தாப்பிசை ஆ. நிரல்நிறை இ. யாற்றுநீர் ஈ. கொண்ட கூட்டு

***விடை: ஆ. நிரல்நிறை***

81. சார்பெழுத்துக்கள் மூன்று எனக் கூறியவர்

அ. பவணந்தி முனிவர் ஆ. புத்தமித்திரர் இ. தொல்காப்பியர் ஈ. குணவீரபண்டிதர்

www.puthiyavidiyaltheni.in

***விடை: இ. தொல்காப்பியர்***

82. புளிமரக் கிளவிக்குரிய சாரியை

அ. கரம் ஆ. அம் இ. காரம் ஈ. காண்

***விடை: ஆ. அம்***

83. இரண்டு பெருந்திசைகள் தம்மில் புணரும் பொழுது இடையில் வரும் இடைச்சொல்

அ. ஒ ஆ. அ இ. உ ஈ. ஏ

***விடை: ஈ) ஏ***

84. இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றும் சொல்

அ. இயற்சொல் ஆ. திரிசொல் இ. உரிச்சொல் ஈ. வடசொல்

விடை :

85. அண்மைச் சொல் எத்தகைய விளி ஏற்கும்

அ. இயல்பு ஆ. அளபெடுத்தல் இ. ஈற்றயல் நீளம் ஈ. ஈறுகெடுதல்

விடை:

86. நம்பியகப் பொருள் குறிப்பிடும் கருப் பொருளின் வகைகள்

அ. 12 ஆ. 14 இ. 13 ஈ. 20

***விடை: ஆ. 14***

87. கைகோளின் இருவகை

அ. களவும் கற்பும் ஆ. இயற்கைப் புணர்ச்சி, பாங்கற்கூட்டம்

இ. பாங்கியிற்கூட்டம், கைக்கிளை ஈ. இடந்தலைப்பாடு, பெருந்திணை

***விடை: அ. களவும் கற்பும்***

88. வரைதல் என்பது

அ. அறத்தொடு நிற்றலைக் குறிக்கும் ஆ. பாங்கற் கூட்டத்தைக் குறிக்கும்

இ. ஒருவழித் தணத்தலைக் குறிக்கும் ஈ. திருமணத்தைக் குறிக்கும்

***விடை: ஈ. திருமணத்தைக் குறிக்கும்***

89. “கல்தோன்றி மண்தோன்றாகக் காலத்து வாளோடு
முன்றோன்றி மூத்த குடி” எனக் கூறும் நூல்

அ. தொல்காப்பியம் ஆ. இறையனார் அகப்பொருள் இ. புறப் பொருள் வெண்பா மாலைஈ. வீரசோழியம்

***விடை: இ. புறப் பொருள் வெண்பா மாலை***

90. போரில் இறந்துபட்டவனின் புகழைப் பாராட்டி இரங்கிக்கூறுவது.

அ. கட்காஞ்சி ஆ. மன்னைக்காஞ்சி இ. ஆஞ்சிக்காஞ்சி ஈ. வஞ்சினக்காஞ்சி

***விடை: ஆ. மன்னைக்காஞ்சி***

www.puthiyavidiyaltheni.in

91. தொல்காப்பியம் குறிப்பிடும் அகப்பொருட்குரிய திணைகள்

அ. ஐந்து ஆ. ஆறு இ. ஏழு ஈ. எட்டு

***விடை: இ. ஏழு***

92. தொல்காப்பியர் 'நடுவுநிலைத்திணை' என்று குறிப்பிடும் திணை

அ. குறிஞ்சி ஆ. முல்லை இ. மருதம் ஈ. பாலை

***விடை: ஈ. பாலை***

93. தொல்காப்பியர் குறிப்பிடும் 'மைவரைஉலகம்' என்பது

அ. நெய்தல் நிலத்தைக் குறிக்கும் ஆ. மருத நிலத்தைக் குறிக்கும்

இ. குறிஞ்சி நிலத்தைக் குறிக்கும் ஈ. முல்லை நிலத்தைக் குறிக்கும்

***விடை: இ. குறிஞ்சி நிலத்தைக் குறிக்கும்***

94. வெட்சி என்பது எந்த அகத்திணைக்குரிய புறத்திணை

அ. குறிஞ்சி ஆ. முல்லை இ. நெய்தல் ஈ. மருதம்

***விடை: அ. குறிஞ்சி***

95. நம்பியகப்பொருள் குறிப்பிடும் மருதத்திற்குரிய சிறுபொழுது

அ. நண்பகல் ஆ. யாமம் இ. இருள் புலர்காலை ஈ. பாலை

***விடை: இ. இருள் புலர்காலை***

96. அரசனது இயல்பினைக் கூறும் துறை.

அ.முரசவாகை ஆ. வாகைஅரவம் இ. முன்தேர்க்குரவை ஈ. அரசவாகை

***விடை: ஈ. அரசவாகை***

97. புறப் பொருள் வெண்பாமாலை குறிப்பிடும் சேரர்க்குரிய பூ

அ. போந்தை ஆ. வேம்பு இ. ஆர் ஈ. முல்லை

***விடை: அ. போந்தை***

98. நம்பியகப் பொருளுக்கு இலக்கியமாகக் கருதப்பெறும் நூல்

அ. திருக்கோவையார் ஆ. பாண்டிக்கோவை இ. வியாசைக் கோவை ஈ. தஞ்சை வாணன் கோவை

***விடை: ஈ. தஞ்சை வாணன் கோவை***

99. 'வாங்குவில் தடக்கை வானவர் மருமான்' என குறிப்பிடப்பட்டவர்

அ. ஐயனாரிதனார் ஆ. அமிதசாகரர் இ. குணசாகரர் ஈ. மயேச்சுரர்

விடை:

100. புறத்திணையில் 'தலைத் தோற்றம்' என்பது

அ. மதிலை அழித்தல் ஆ. ஆநிரைகளை மீட்டல்

www.puthiyavidiyaltheni.in

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இ. எதிரெதிர் போரிடுதல் ஈ. தலைவன் முன்னே வந்து ஊரர் மகிழ்ச்சியடைதல்

***விடை: ஈ. தலைவன் முன்னே வந்து ஊரர் மகிழ்சியடைதல்***

101. சங்கங்கள் பற்றிக் குறிப்பிடும் இலக்கண நூல்

அ. இறையனார் அகப்பொருள் ஆ. நம்பியகப் பொருள் இ. தண்டியலங்காரம் ஈ. தொல்காப்பியம்

***விடை: அ. இறையனார் அகப்பொருள்***

102. நிலையாமையை அறிவுறுத்த மாங்குடி மருதனாரால் பாடப்பட்ட பாட்டு

அ. மதுரைக்காஞ்சி ஆ. குறிஞ்சிப்பாட்டு இ. முல்லைப்பாட்டு ஈ. நற்றினை

***விடை: அ. மதுரைக்காஞ்சி***

103. மன்னர், புலவர் உறவை மேம்படுத்தி உரைக்கும் நூல்

அ. அகநானூறு ஆ. புறநானூறு இ. பரிபாடல் ஈ. பதிற்றுப்பத்து

***விடை: ஈ. பதிற்றுப்பத்து***

104. "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி" என்ற வரி இடம் பெறும் நூல்

அ. நற்றினை ஆ. குறுந்தொகை இ. கலித்தொகை ஈ. அகநானூறு

***விடை: ஆ. குறுந்தொகை***

105. கடைச்சங்க காலத்தில் செய்யுள்யாத்த அரசன்

அ. பாண்டியன் நெடுஞ்செழியன் ஆ. வெண்டேர்ச்செழியன் இ. கடுங்கொள் ஈ. காய்சினவழுதி

***விடை: அ. பாண்டியன் நெடுஞ்செழியன்***

- வெண்டேர்ச்செழியன் - இரண்டாம் சங்கம்
- கடுங்கொள் - முதல் சங்கம்
- காய்சினவழுதி – முதல் சங்கம்

106. கொங்குவேளிர் இயற்றிய நூல்

அ. பெருங்கதை ஆ. விம்பசாரக்கதை இ. நீலகேசி ஈ. சூளாமணி

***விடை: அ. பெருங்கதை***

107. கட்டியங்காரனின் பட்டத்த யானையின் பெயா

அ. ஐராவதம் ஆ. சந்திரசூடன் இ. அசனிவேகம் ஈ. இடியேறு

***விடை: இ. அசனிவேகம்***

108. "ஏதிலார் போலப்பொது நோக்கு நோக்குதல் _______ கண்ணேஉள" – விடுப்பட்ட சொல்லைக் கண்டறிக.

அ. ஆன்றோர் ஆ. காதலர் இ. மாதரார் ஈ. மானிழை

***விடை: இ. மாதரார்***

109. "பகல்வெல்லும் கூகையைக் காக்கைஇகல்வெல்லும்

வேந்தர்க்கு வேண்டும் பொழுது" - இக்குறள் அமைந்தள்ள அதிகாரம்?

www.puthiyavidiyaltheni.in

www.Padasalai.Net www.TrbTnpsc.com



அ. காலமறிதல் ஆ. இடனறிதல் இ. வலியறிதல் ஈ. தெரிந்து செயல் வகை

***விடை: அ. காலமறிதல்***

❖ 11ம் வகுப்பு – 27ம்பக்கம்

110. “பகல்தெற்கு நொக்கா இராவடக்கு நோக்கார் பகல்பெய்யார்தீயினுள் நீர்” - இப்பாடல் அமைந்துள்ள நூல்

அ. திருக்குறள் ஆ. நாலடியார் இ. பழமொழிநானூறு ஈ. ஆசாரக்கோவை

***விடை: ஈ. ஆசாரக்கோவை***

***பாடல் 33 – கழிவிடத்தில் அமரும் திசை***

***பகல் நேரத்தில் தெற்குத்திசையைப் பாராமலும் இரவில் வடக்குத்திசையைப் பாராமலும் அமர்ந்து மலம் கழிக்க வேண்டும் . பகலில் குடிநீரை ஊற்றித்தீயை அவிக்கக்கூடாது.***

111. எந்த வேத நூலில் இசையைப் பற்றி அதிகமாக விவரிக்கப்படுகிறது?
அ) ரிக்வேதம் ஆ) சாமவேதம் இ) யசூர்வேதம் ஈ) அதர்வணவேதம்

***விடை: ஆ) சாமவேதம்***

- சடங்குகளின் போது இசைப்பதற்காகவே சாம வேதம் இயற்றப்பட்டதாகும் .
- சாம வேதத்திலிருந்தே இந்திய இசை தோற்றியதாகவும் கூறப்படுகின்றது.

112. இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
அ) 1916 ஆ) 1918 இ) 1920 ஈ) 1922

***விடை: இ) 1920***

- **ஒத்துழையாமை இயக்கம்** (*Non-cooperation movement*) என்பது பிரித்தானிய இந்தியாவில் காலனிய அரசுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட நாடளாவிய மக்கள் இயக்கமாகும்.
- மகாத்மா காந்தியாலும் இந்திய தேசிய காங்கிரசாலும்முன்னெடுக்கப்பட்ட இவ்வியக்கம் செப்டம்பர் 1920 இல் தொடங்கி பெப்ரவரி 1922 வரை தொடர்ந்தது.
- ரவ்லட் சட்டம் மற்றும் ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு எதிராகக் குரல் கொடுக்கவும் 1919 இந்திய அரசு சட்டத்தில் இந்தியருக்கு வழங்கப்பட்டிருந்த குறைவான அதிகாரங்களை ஏற்க மறுத்தலை வெளிக்காட்டவும் காந்தி ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார்.

113. இந்திய அரசியலமைப்புச் சட்டம், அரசியலமைப்புச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள்
அ) 26 ஜனவரி 1950 ஆ) 26 ஜனவரி 1947 ஆ) 26 நவம்பர் 1949 ஈ) 26 ஜனவரி 1950

***விடை: ஆ) 26 நவம்பர் 1949***

114. இந்திய விடுதலை இயக்கத்தின் போது தமிழ்நாட்டில் உள்ள வேதாரண்யத்தில் நடைபெற்ற உப்பு சத்தியாகிரகத்திற்கு தலைமையேற்று நடத்தியவர் யார்?
அ) இராஜாஜி ஆ) சர்தார்வேதரெத்தினம் இ) சத்திய மூர்த்தி ஈ) ஜீவானந்தம்

***விடை: அ) இராஜாஜி***

- The Vedaranyam March or Vedaranyam Satyagraha was organised to protest the salt tax imposed by the British Raj in India.
- The march took place in April 1930 and was the second of its kind following the Dandi March organised by Mahatma Gandhi,
- both in the framework of the Civil Disobedience Movement.
- The Vedaranayam March was led by a group of 100 volunteers from the Indian National Congress (INC) under the leadership of C. Rajagopalachari—often referred to as "Rajaji".
- It began at Trichinopoly (now Tiruchirappalli) and ended inVedaranyam, a small coastal town in Tanjore District.

115. பின்வருவனவற்றுள் பசுமை இல்ல விளைவிற்கு (Green House Effect) காரணமான வாயு எது?
அ) ஹீலியம் ஆ) நியான் இ) கார்பன்-டை-ஆக்ஸைடு ஈ) எதுவுமில்லை

***விடை: இ) கார்பன்-டை-ஆக்ஸைடு***

- பைங்குடில் வளிமங்கள் அல்லது பைங்குடில் வாயுக்கள்என்பவை வளிமண்டலத்தில் உள்ள வெப்பக்கதிர்வீச்சைக்கொடுக்கும் அகச்சிவப்புக் கதிரை உறிஞ்சி, பின் வெளிவிடும் தன்மை கொண்ட வளிமங்களாகும்.
- இவ்வாறு அவை வெப்பத்தை வெளியேற்றும்போது ஏற்படும் விளைவே பைங்குடில் விளைவு[3]க்கான அடிப்படைக் காரணமாகும்.

- பூமியின் வளிமண்டலத்தில் உள்ள முக்கியமான பைங்குடில் வளிமங்கள் நீராவி,காபனீரொக்சைட்டு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன், மற்றும் க்ளோரோ∴ப்ளூரோகார்பன்கள் ஆகியவையாகும்

116. இரைச்சலான குழந்தையும் ஓசையற்ற மனமும் இதனை எழுதியவர் யார்?
அ) ∴ப்ரோபெல் ஆ) J.கிருஷ்ணமூர்த்தி இ) டூயி ஈ) மரியாமாண்டிசோரி

***விடை: ஆ) J.கிருஷ்ணமூர்த்தி***

117. 'தேசிய திறந்தநிலை பள்ளி நிறுவனம்' எப்போது நிறுவப்பட்டது.
அ) நவம்பர் 1986 ஆ) அக்டோபர் 1989 இ) நவம்பர் 1989 ஈ) அக்டோபர் 1986

***விடை: இ) நவம்பர் 1989***

| | |
|---|---|
| **Abbreviation** | NIOS |
| **Formation** | 3 November 1989 |
| **Type** | Governmental Board of School Education |
| **Headquarters** | Noida, Uttar Pradesh, India |

118. 'வகுப்பறை அல்லாத கற்றல்' என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?
அ) ஹெல்ம்பொர்க் ஆ) ஜான்ஹால்ட் இ) இவான் இல்லிச் ஈ) மாண்டிசோரி

***விடை: இ) இவான் இல்லிச்***

119. 'INFLIBNET' பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான ஒரு தன்னாட்சி மையம், இது_____________ன் அங்கமாகும்.
அ) மத்திய பல்கலைக்கழகங்கள் ஆ) CBSE இ) CIET ஈ) UGC

***விடை: ஈ) UGC***

- The Information and Library Network (INFLIBNET) Centre was established as a project of IUCAA in 1991 and was recognized and as an independent, autonomous Inter-University Centre (IUC) of the University Grants Commission (UGC) in May 1996.

120. 'OPAC' என்பதன் விரிவாக்கம்
அ) Open Personal Assessment Criteria ஆ) Online Public Account Coding
இ) Online Programming And Coding ஈ) Online Public Access Catalog

***விடை: ஈ) Online Public Access Catalog***

- An online public access catalog (often abbreviated as OPAC or simply library catalog) is an online database of materials held by a library or group of libraries. Users search a library catalog principally to locate books and other material available at a library.

121. 'ஹோமியோஸ்டேஸிஸ்' என்ற சொல்லை கட்டமைத்தவர்
அ) ∴பிஷர் ஆ) கேரோல் இ) W.B.கேனான் ஈ) மார்க்கன்

***விடை: இ) W.B.கேனான்***



www.puthiyavaltheni.in

- Walter Bradford Cannon (October 19, 1871 – October 1, 1945) was anAmerican physiologist, professor and chairman of the Department of Physiology at Harvard Medical School.
- He coined the term fight or flight response, and he expanded on Claude Bernard's concept of homeostasis. He popularized his theories in his book *The Wisdom of the Body*, first published in 1932.

122. ________ சொல்லின் நேர்ப்பொருளானது 'மனதை பிளத்தல்' என்று பொருள்படும்.
அ) பாரநோயா ஆ) நியூராஸிஸ் இ) அம்னீசியா ஈ) ஸ்கிசோப்ரீனியா
***விடை: ஈ) ஸ்கிசோப்ரீனியா***

123. கல்வியின் பல்வேறு தத்துவங்கள் மற்றும் போக்குகளின் பயன்பாடு மற்றும் ஏற்புடை அம்சங்களின் இசைவான கலப்பினை____________ எனலாம்.
அ) உண்மைத்தத்துவம் ஆ) சமரசத்துவம் இ) பயனளவுக் கொள்கை ஈ) இயற்கைத்தத்துவம்
***விடை: ஆ) சமரசத்துவம்***

124. தாகூரின் 'விஸ்வபாரதி' ஒரு மத்திய பல்கலைக்கழகமாகவும் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாகவும் அறிவிக்கப்பட்ட ஆண்டு ________
அ) 1919 ஆ) 1921 இ) 1956 ஈ) 1951
***விடை: ஆ) 1921***

125. 'அறிமுகப்படுதலின் மூலம் அறிதல்' மற்றும் 'விரித்துரைத்தல் மூலம் அறிதல்' இவற்றிற்கிடையேயான வேறுபாட்டினை மேம்படுத்தியவர்
அ) J.J.ரூசோ ஆ) ஸ்ரீஅரவிந்தர் இ) பெர்ட்ரான்ட்ரஸ்ஸல் ஈ) சுவாமி விவேகானந்தர்
***விடை: இ) பெர்ட்ரான்ட்ரஸ்ஸல்***

126. கீழ்க்கண்டுள்ளவர்களில் இலக்கியத்திற்கான நோபல் பரிசினை பெறாதவர்
அ) பாட்ரிக் மோதியானா ஆ) அலிஸ் மெக்கன்ரோ இ) மோயான் ஈ) எட்.சில்வா
***விடை: ஈ) எட்.சில்வா***
அ) பாட்ரிக் மோதியானா -1973.
ஆ) அலிஸ் மெக்கன்ரோ -2013
இ) மோயான் -2012

127. பின்வருபவர்களில் பாரத ரத்னா விருதினை முதன் முதலில் பெற்றவர்களுள் இவரும் ஒருவர்
அ) இராஜேந்திர பிரசாத் ஆ) ஜவஹர்லால் நேரு இ) மோ.க.காந்தி ஈ) சி.வி.ராமன்
***விடை: ஈ) சி.வி.ராமன்***
அ) இராஜேந்திர பிரசாத் -1962
ஆ) ஜவஹர்லால் நேரு -1955
இ) மோ.க.காந்தி - வாங்கவில்லை
ஈ) சி.வி.ராமன் -1954

128. முதல் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இந்தியாவில் நடைபெற்ற வருடம்
அ) 1947 ஆ) 1951 இ) 1965 ஈ) 1972
***விடை: ஆ) 1951***

129. உருவாக்கப்படவுள்ள பிரிக்ஸ் வளர்ச்சி வங்கியின் தலைமையிடம் அமைய உள்ள இடம்.
அ) மும்பை ஆ) ஷாங்காய் இ) மாஸ்கோ ஈ) பீஜிங்
***விடை: ஆ) ஷாங்காய்***

- புதிய வளர்ச்சி வங்கி (*New Development Bank*, பழைய பெயர்:பிரிக்ஸ் வளர்ச்சி வங்கி) என்பது வளர்ந்து வரும் ஐந்து நாடுகளின் கூட்டமைப்பின் சார்பாக உருவான வங்கியாகும்.
- இந்தக் கூட்டமைப்பில் பிரேசில், உருசியா, இந்தியா, சீனா மற்றும்தென்னாப்பிரிக்கா ஆகிய வளரும் நாடுகள் இணைந்துள்ளன.
- இந்த வங்கி உலக வங்கிக்கும் அனைத்துலக நாணய நிதியம் ஆகியவற்றிற்கும் மாற்றாக விளங்குகிறது.

www.puthiyavidiyaltheni.in

- புதிய வளர்ச்சி வங்கி ஐந்து உறுப்பு நாடுகளின் நிதி தேவைகளுக்கும் முன்னேற்றத்திற்கும் பெரும் துணை புரியும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- சீனாவின் சாங்காய் நகரைத் தலைமை இடமாக கொண்டும், முதல் தலைவராக ஒரு இந்தியரைக் கொண்டும் செயல்படும்.

130. இஸ்ரோ வால் செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பப்பட்ட விண்வெளி ஓடத்தை தாங்கிச் சென்ற செலுத்தி ஊர்தி
அ) GSLV – 5 ஆ) SLV – 2014 இ) PSLV – C25 ஈ) GSLV – C6

***விடை: இ) PSLV – C25***

131. 'பாடப்புத்தக கையெழுத்துப் பிரதி தயாரித்ததில்' (1970)________ ன் வெளியீடு
அ) ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம் ஆ) ஐக்கிய நாடுகள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
இ) ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதி ஈ) ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பகம்

***விடை: ஈ) ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பகம்***

132. கல்வி அமைச்சகத்தினால் மே 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மனவெழுச்சி ஒருமைப்பாட்டு குழுமத்தின் தலைவர் யார்?
அ) வி.வி.கிரி ஆ) Dr.சம்பூர்ணனானத் இ) ஸ்ரீமதி.இந்திராகாந்தி ஈ) B.முகர்ஜீ

***விடை: ஆ) ஙுச.சம்பூர்ணனானத்***

- University Education Commission (1948-49) popularly called Dr. Radhaksrishan Commission
- Secondary Education Commission (1952-53) popularly called Dr. Mudaliar Commission
- Committee on Higher Education for Rural Areas, Rural Institutions (1954) -- Shri K. L. Shrimali Committee
- National Committee on Women's Education (1958) -- Shrimati Durgabai Deshmukh Committee
- University Grants Commission's Review Committee on Education (1960) -- Prof. K.G. Saiyidain Committee
- U. N. Dhebar Commission (1960)
- Committee on Emotional Integration (1961) -- Dr. Sampurnanand Committee
- Committee on Plan Projects: Study Team for Selected Educational Schemes (1961) – Shri B. N. Jha Committee
- Study Group on the Training of Elementary Teachers in India (1961)
- Kothari Committee on Model Act for Universities (1961)
- University Grants Commission's Committee on Education as an Elective Subject at the Undergraduate Stage (1963) -- Mr. A. R. Wadia Committee
- Study Group on the Study of English in India (1964) – Prof. Gokak Committee
- Education Commission (1964-66), popularly called Dr. D. S. Kothari Commission
- Committee of Members of Parliament on Education (1967)
- Three Delegations by University Grants Commission (1967-1971)
- Steering Committee of Planning Group on Education (1968)
- National Policy on Education (1968)
- Review Committee on the Working of National Council of Educational Research and Training (1968) -- Dr. Nag Chaudhuri Committee
- Study Group on the Development of Pre-school Child (1970) – Shrimati Mina Swaminathan Committee
- Gajendragadkar Committee on Governance of Universities and Colleges (1971)
- National Committee on 10+2+3 Educational Structure (1972) -- Dr. Shukla Committee
- Committee on Secondary Teacher Education of NCTE (1973-77) -- Dr. Jha Committee
- Committee on Elementary Teacher Education of NCTE (1975) -- Dr. Malcolm S. Adiseshaiah Committee
- University Grants Commission's Panel on Teacher Education During Fifth Plan Period (1974)
- The Curriculum for Ten-Year School: A Framework (1975)
- Standing Committee of National Council for Teacher Education (1975-76)
- Review Committee on the Curriculum for Ten-Year School (1977) -- Shri Ishwarbhai Patel Committee
- Working Group on Vocationalisation of Education (1977-78) -- Dr. Malcolm S. Adiseshaiah Committee
- Draft National Policy on Education (1979)
- Study Group on INSAT Television Utilisation for Education and Development (1980) -- Shri S. Sathyam Committee

www.Padasalai.Net www.kalvisolai.com kalvithenthemi.in

- National Commissions on Teachers – I & II: The Teacher and Society (1983-85) – Prof. Chattopadhyaya Commission
- Working Group to Review Teachers' Training Programme (In the Light of the Need for Value-Orientation) (1983)
- Challenge of Education: A Policy Perspective (1985)
- National Curriculum for Primary and Secondary Education: A Framework (1985)
- National Policy on Education (1986)
- National Policy on Education: Programme of Action (1986)
- National Curriculum for Elementary and Secondary Education – A Framework (1988)
- National Curriculum for Teacher Education: A Framework (1988)
- Committee for Review of NPE 1986: Towards an Enlightened and Humane Society (1990) -- Acharya Ramamurhty Committee
- University Grants Commission's Report of the Curriculum Development Centre in Education (1990)
- NCTE Committee for Teacher Education Programme Through Distance Education Mode (1990)
- Central Advisory Board of Education Committee on Distance Education (1992)
- CABE Committee on Policy, 1992
- National Policy on Education 1986: Programme of Action 1992
- National Advisory Committee: Learning Without Burden (1992)
- The National Council for Teacher Education Act, 1993
- Group to Examine the Feasibility of Implementation of the Recommendations of the National Advisory Committee (1993) -- Prof. Yashpal Committee
- Committee on B.Ed. Correspondence (1993) -- Prof. Ramlal Parikh Committee
- University Grants Commission's Committee on B.Ed. Correspondence, Distance Education Programme (1994)
- Special Orientation Programme for School Teachers (SOPT) (1994-97)
- Committee of National Council for Teacher Education on Different Modes of Education Used for Teacher Preparation in India (1995)
- University Grants Commission's Committee on B.Ed. Through Correspondence for In-service Teachers (1995) -- Prof. Takwale Committee
- Planning Commission's Report on Teacher Education in Five Year Plans (1951-97)
- NCTE Curriculum Framework for Quality Teacher Education (1998)
- National Curriculum Framework for School Education (2000)
- National Curriculum Framework (2005)
- Curriculum Framework for Teacher Education (2006)
- National Curriculum Framework for Teacher Education (2009)
- Panel to Review the functioning of the University Grants Commission (UGC) and the All-India Council for Technical Education (AICTE) (2008), later rechristened as The Committee to Advise on Renovation and Rejuvenation of Higher Education (2009) -- Prof. Yashpal Committee
- The Right of Children to Free and Compulsory Education Act, 2009

133. 'கழிவு' என்பதனை ___________ குழுவானது ஒரு குழந்தை தொடக்கக் கல்வி முடிப்பதற்கு முன்னரே முதிர்வற்ற நிலையில் வெளியேறுதல் என வரையறுக்கிறது.

அ) சார்ஜன்ட் ஆ) ஜாகிர்ஹுசைன் இ) ஆபாட்-வுட் ஈ) ஹார்டாக்

***விடை: ஈ) ஹார்டாக்***

134. வளர்ச்சிசார் செயல்பாடுகள் என்ற கருத்தினை முதலில் அறிமுகப்படுத்தியவர் யார்?

அ) கிளௌஸ்மெர் ஆ) ஜெரோம் புரூனர் இ) இராபர்ட்ஹாவிகர்ஸ்ட் ஈ) இவான் பாவ்லோவ்

***விடை: இ) இராபர்ட்ஹாவிகர்ஸ்ட***

135. கல்வி உளவியலின் பிரதான பிரிவுகளைக் கண்டறிந்தவர்

அ) கொலெஸ்நிக் ஆ) H.C.லின்ட்கிரென் இ) கேரிஸன் எட்.அல் இ) சிம்ப்சன்

***விடை:அ) கொலெஸ்நிக்***

136. தேசிய முதியோர் கல்வி திட்டம் (NAEP) அறிமுகப்படுத்தப்பட்டது

அ) 2 அக்டோபர் 1968 ஆ) 2 அக்டோபர் 1978 இ) 2 நவம்பர் 1988 ஈ) 2 அக்டோபர் 1986

***விடை: ஆ) 2 அக்டோபர் 1978***

- the University Grants Commission's Policy (1977), the National Adult Education Programme was launched by Government of India on October 2, 1978.



www.puthiyavidiyaltheni.in

137. கிராமப்புறங்களில் உள்ள மகளிரின் கல்விக்கு மக்களின் ஒத்துழைப்பின்மைக்கான காரணங்களை அறியவும், மக்களின் ஒத்துழைப்பினை பெறுதலுக்கும் அமைக்கப்பட்டது __________ ஆகும்.
அ) கல்விக்குழு (1964-66) ஆ) ஸ்ரீமதி.துர்காபாய் தேஷ்முக் குழு (1959)
இ) M.பக்தவட்சலம் குழு (1963) ஈ) ஸ்ரீமதி.ஹன்சா மேத்தா குழு (1962)
***விடை: ஆ) ஸ்ரீமதி.துர்காபாய் தேஷ்முக் குழு (1959)***

138. 'மாநில நிதியிலிருந்து முழுமையாக பராமரிக்கப்படும் எந்தவொரு கல்வி நிறுவனத்திலும் சமய அறவுரைகள் தரப்படக்கூடாது' எந்த சட்டப்பிரிவு இதனைக் கூறுகிறது?
அ) சட்டப்பிரிவு 21 ஆ) சட்டப்பிரிவு 28(1) இ) சட்டப்பிரிவு 30(1) ஈ) சட்டப்பிரிவு 45
***விடை: ஆ) சட்டப்பிரிவு 28(1)***

139. இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தால் __________ஆண்டில் UNESCO–வுடன் இணைந்து பணியாற்றுவதற்கான இடைக்கால இந்திய தேசிய குழு உருவாக்கப்பட்டது.
அ) 1949 ஆ) 1959 இ) 1969 ஈ) 1979
***விடை: அ) 1949***

140. இந்தியாவில், பார்வை குறையுடையோருக்கான தேசிய நிறுவனம் அமைக்கப்பட்ட இடம்
அ) கொல்கத்தா ஆ) சென்னை இ) ஹைதராபாத் ஈ)டெஹ்ராடூன்
***விடை: ஈ)டெஹ்ராடூன்***
- The NIVH has its Headquarters at 116, Rajpur Road, Dehradun with one Regional Centre at Chennai (Tamil Nadu) established in 1988 and two Regional Chapters at Kolkata (W.B.) and Secunderabad (Andhra Pradesh) established in the year 1997.

141. நுண்ணறிவு படிநிலை கோட்பாட்டினை தந்த P.E.வெர்னான் ஒரு________ உளவியலாளர்
அ) ரஷ்ய ஆ) பிரிட்டிஷ் இ) ஜெர்மன் ஈ) ∴ப்ரென்சு
***விடை: ஆ) பிரிட்டிஷ்***
- Philip Ewart Vernon (6 June 1905 – 28 July 1987) was a British psychologist.

142. கவன ஊசல் என்பதனை உளவியல் ஆய்வகத்தில்_______________ சோதனையின் மூலம் மேற்கொள்ளலாம்.
அ) டாக்கிஸ்டாஸ்கோப்ஆ) மின் அட்டைகள் இ) விரல் நழுவச் சோதனை ஈ) மோசான்ஸ் வட்டத்தட்டு
***விடை: ஈ) மோசான்ஸ் வட்டத்தட்டு***

143. _____________ காது கேளாதோர் மற்றும் மொழி பயன்பாட்டில் பின்தங்கிய குழந்தையின் பயன்பாட்டிற்னாக வடிவமைக்கப்பட்டது.
அ) பின்டர் - பேட்டர்சன் அளவுகோல் ஆ) படகட்டமைப்புத் தேர்வு
இ) ஆர்த்தரின் புள்ளி அளவுகோல் ஈ) பொருள் ஒருங்கமைத்தல் தேர்வு
***விடை: அ) பின்டர் - பேட்டர்சன் அளவுகோல்***

144. வேட்சன் நடத்திய ஒரு சோதனையில் சோதனை பொருளான 'ஆல்பர்ட்'என்னும் பெயருடைய மனித குழந்தையிடம் விளையாடுவதற்காக __________ கொடுக்கப்பட்டது.
அ) பூனைக்குட்டி ஆ) முயல் இ) புறா ஈ) எலி
***விடை: ஆ) முயல்***

145. பொதுமைப்படுத்துதலின் பரிமாற்ற மதிப்பை தேர்வு செய்ய அம்பு எறிதல் சோதனையை நடத்தியவர்
அ) கார்ல்யூங் ஆ) சார்லஸ் ஜீட் இ)W.C.பேக்லீ ஈ) சிக்மண்டு ப்ராய்டு
***விடை: ஆ) சார்லஸ் ஜீட்***

146. ஒரு குழந்தையின் மனவெழுச்சி வளர்ச்சியானது சமூக வளர்ச்சியுடன் __________ ஒட்டுறவுத் தன்மையை கொண்டு அமைகிறது.
அ) நேர்மறை ஆ) எதிர்மறை இ) பூஜ்ய ஈ) மேற்கண்ட ஏதுமில்லை
***விடை: அ) நேர்மறை***

147. ___________ ஒருவரின் அனுபவங்களின் அடிப்படையில் புலன் உணர்வுகளை பொருள் விளக்கும் செயல்முறைகள் என வரையறுக்கலாம்.
அ)கவனித்தல் ஆ) ஊக்குவித்தல் இ)புலன்காட்சி ஈ)பொதுமைப்பாடு

www.Padasalai.Net www.TrbTnpsc.com



***விடை: இ)புலன்காட்சி***

148. நடத்தை உருவாக்கத்தில் 'தூண்டல் இல்லையேல் துலங்கல் இல்லை' என்பதை எதிர்த்தவர்
அ) B.F.ஸ்கின்னர் ஆ) தார்ண்டைக் இ) இவான் பாவ்லோவ் ஈ) J.B.வாட்சன்
***விடை: அ) B.F.ஸ்கின்னர்***

149. ________மனோபாவமானது கவனத்தை தூண்டி நிலைநிறுத்தக்கூடிய உணர்வுப்புலனை அடிப்படையாகக் கொண்டது.
அ)கவனம் ஆ)ஊக்குவித்தல் இ)புலன்காட்சி ஈ)கவர்ச்சி
**விடை: ஈ)கவர்ச்சி**

150. எந்தக் கற்றல் சொற்சார்ந்த கற்றலை விட அதிக நேரம் நினைவிலிருக்கும்?
அ) கேட்டல் வழிக்கற்றல் ஆ) நினைவுசார் கற்றல் இ) செய்திறன் கற்றல் ஈ) உற்று நோக்கல்
***விடை: ஆ) நினைவுசார் கற்றல்***

## உங்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் கேட்கப்பட்டு உறுதியான விடைகள்
## 15.01.15
## அன்று
## www.puthiyavidiyaltheni.in
## வெளியிடப்படும்

www.puthiyavidiyaltheni.in

# TET PAPER I &II
## பயிற்சி வகுப்புகள் தொடங்கும் நாள் : 01.02.15